# <u>IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.</u>

## <u>O.S.No. 143/2020</u>

சாட்சி : DW– 2

பெயர் : திரு. ரமேஷ் தேதி : 10.06.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**<u>குறுக்குவிசாரணை</u>**:– (வாதி தரப்பில்)

2011ம் வருடத்தில் சிவலிங்கம் என்பவரிடமிருந்து சொத்தை பிரதிவாதி கிரயம் பெற்றார். பிரதிவாதி சொத்தை 2011 ம் வருடத்தில் கிரயம் பெற்றபோது வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தார். எனக்கு சர்வே நெம்பர் ஞாபகமில்லை. விஸ்தீரணம் 60 X 80 ஆகும். 4800 சதுர அடிகள் ஆகும். அந்த சொத்து காலீப் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அந்த காலீப் என்பவர் 15.09.1989 தேதியில் டாக்டர்.சம்பு, சுரேந்திரன் மற்றும் ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார். அவர்களுக்குள் அந்த நிலத்தைப் பொறுத்து பத்திர பரிமாற்றங்கள் ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியாது. தற்போது வரை அந்த நிலமும், அதற்கு பக்கத்தில் உள்ள நிலமும் காலி நிலமாக உள்ளது. அதற்கு பக்கத்தில் வடக்கு புறத்தில் கிழமேலாக 30 அடி தடம் செல்கிறது. ஏற்கனவே வாதியின் முன்னோர்கள் வாங்கிய நிலத்தை பிரதிவாதி தவறுதலாக வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமை எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய நிலத்திற்கு கிழபுறத்தில் சுரேந்திரன் நிலம் உள்ளது. மேற்கே செல்வராஜ் நிலம் உள்ளது. காலீப் என்பவரிடமிருந்துதான் செல்வராஜ் கிரயம் வாங்கினார். அந்த இடத்தில் காலீப் என்பவருக்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு தாவா சொத்தை பற்றி தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதி சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Taken down by me in open Court and dictated to the Typist by me and read over to the deponent and acknowledged by him/her to be correct.

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.